# நான் போற்றாதிருக்க முடியாத ஒரு பிரசங்கியார் (18:24-28)

*நம்மில் பலர் நாம் போற்றுகின்ற பிரசங்கியார்களைப் பெற்றுள்ளோம். நான் அவர்களைப் பற்றிய (நான் போற்றும் பிரசங்கியார்களைப் பற்றிய) பட்டியல் ஒன்று தொகுக்க வேண்டியிருந்தால், அநேகமாக, நான் எனது இளமைக் காலத்தில் என்னைக் கவர்ந்த குலூவிஸ் ரோட்ஸ் அவர்களின் பெயருடன் தான் அதை ஆரம்பிப்பேன். அப்பட்டியலின் ஏதாவதொரு இடத்தில், ஜார்ஜ் W. பெய்லியின் பெயரை நான் உள்ளடக்குவேன்; டெக்ஸாஸின் அபிலைனில் உள்ள கல்லூரி சபையில் 1 கொரிந்தியர் 13ல் அவர் செய்ய நான் கேட்ட முதல் பிரசங்கம் எனது நினைவில் மிகத் தெளிவாக இருக்கின்றது. எனது பட்டியலில், அபிலைன் கிறிஸ்தவப் பல்கலைக் கழகத்தில் பிரசங்கித்தல் பற்றித் தொடர் விரிவுரையாற்றிய பேட்செல் பேரட் பேக்ஸ்ட்டர் அவர்களும் இருப்பார். எழுத்துக்களின் மூலம் மட்டுமே நான் அறிந்துள்ள பிரசங்கியாரான T.B. லாரி மோர் அவர்களும் கூட அவர் தம் இனிமையான ஆவிக்காக எனது பட்டியலில் உள்ளடங்கப்படுவார்.*

*இவர்களை நான் போற்றுவதற்கு ஒரு காரணம், சத்தியத்தின் மீது இவர்கள் கொண்ட அன்பே ஆகும்; இவர்கள் ஒவ்வொருவரும் சத்தியத்தை அறிவிப்பதற்கென்றே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். இருந்தாலும், ஒரு கால கட்டத்தில், சற்றுப் பொழுது சத்தியத்தையும் தவறையும் சேர்த்துப் பிரசங்கித்துக் கொண்டிருந்த ஒரு பிரசங்கியாரையும் நான் போற்றாமல் இருக்க முடியாது. இம்மனிதரை நாம் அப். 18ம் அதிகாரத்தின் முடிவுப் பகுதியில் சந்திக்கின்றோம்; இவரது பெயர் அப்பொல்லோ என்பதாகும்.*

*அதிகாரம் 18ன் வசனம் 23, பவுலின் மூன்றாவது ஊழியப் பயணத்தின் தொடக்கத்தைக் கூறுகின்றது: "அங்கே [சீரியாவின் அந்தியோகியாவிலே] சில காலம் சஞ்சரித்த பின்பு, புறப்பட்டு, கிரமமாய்க் கலாத்தியா நாட்டிலேயும் பிரிகியா நாட்டிலேயும் சுற்றித் திரிந்து, சீஷரெல்லாரையும் திடப்படுத்தினான்.'' எபேசு பட்டணமே அவரின் நிறைவான அடைவிடமாயிருந்தது (19:1). ஆயினும் பவுல் அத்தலைநகருக்குச் சென்று சேர்வதைப் பற்றிக் கூறுமுன் லூக்கா, அப்பொல்லோவின் வரலாற்றை இடையில் நுழைத்து, பவுலின் இரு பயணங்களுக்கு இடையில் நடந்ததைப் பற்றி நமக்குக் கூறி, பவுல் எபேசுவில் சேர்ந்த போது கண்ட சூழ்நிலைக்கு நம்மைத் தயார் செய்கின்றார்.*

*வசனம் 24, "அப்பொழுது அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும்[1] சாதுரியவானும்[2] வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ[3] என்னும் பேர் கொண்ட ஒரு யூதன் எபேசு பட்டணத்துக்கு வந்தான்'' என்று தொடங்குகின்றது. இவ்விதமாய் நாம் அப்பொல்லோவுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றோம், இவர் ஆதி சபையில் மிகப் பிரபலமான நற்செய்தி ஊழியரானார் (1 கொரி. 3:5, 6; தீத்து 3:13). அவருடைய பெற்றோர்கள் யூதர்களாயிருந்த போதிலும், அவர் புகழ் பெற்ற நகரமும்,[4] எகிப்தின் துறைமுகமும், நைல் நதியின் முகத்துவாரத்தில் இருந்து சில மைல்களே தள்ளியிருந்ததுமான (வரைபடத்தில் காணவும்) அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவராய் இருந்தார். மகா அலெக்சாந்தரின் நினைவாக உண்டாக்கப்பட்டு, அவரது பெயராலேயே அழைக்கப்பட்ட அந்த நகரில் கணிசமான எண்ணிக்கையில் யூத மக்கள் இருந்தார்கள். பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பான செப்துவஜிந்த் என்ற புத்தகமானது அலெக்சந்திரியாவில்தான் உண்டாக்கப்பட்டது. யூத போதகர்களாக வாழ்ந்திருந்தவர்களிலேயே மிகவும் நற்பெயர் பெற்றிருந்த பிலோ என்பவர் (பவுல், அப்பொல்லோவின் காலத்திலேயே இருந்தவர்) அலெக்சந்திரியாவில்தான் வசித்தார். அப்பொல்லோ, யோவானின் ஞானஸ்நானத்தை அறிந்திருந்தபடியால் (வ. 25) பலஸ்தீனத்தில் சில காலம் இருந்து, ஒருவேளை, பவுலைப் போலவே தமது இளம் வயதில் அங்கு படித்திருக்கலாம்.[5]*

அப்பொல்லோவைப் பற்றி நான் படிக்கையில், நான் போற்றுகின்ற பல பண்புகளை அவரிடத்தில் நான் காணுகின் றேன். நான் எதை அர்த்தப்படுத்துகிறேன் என்று உங்களுக்குக் காண்பிக்கிறேன்.

## அவர் தம்முடைய தாலந்துகளைக் கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுத்தார் (18:24-26)

அப்பொல்லோ நன்கு கல்வி கற்றவர் என்பதை லூக்காவின் விவரிப்பு சுட்டிக்காட்டுகின்றது. அலெக்சந்திரியாவில் வளர்க் கப்பட்ட இவர், ஒருவேளை பலஸ்தீனத்தில் காலத்தைச் செலவிட்டு, தமது நாட்களில் கிடைத்த மிக உயர்ந்த உலகக் கல்வி மற்றும் மதக் கல்வியைப் பெற்றிருந்திருக்கலாம். மற்றும் அப்பொல்லோவைச் சாதுரியவான் மற்றும் வல்லவன் என்று லூக்கா குறிப்பிடுவது, பேசுவதிலும் இணங்கச் செய்வதிலும் அப்பொல்லோவுக்கு இருந்த திறமையை உறுதிப்படுத்தியது. ஒரு மனிதரிடத்தில் உள்ள இந்தப் பண்புகளை நான் போற்றுகின்றேன். (அப்பொல்லோவின் சாதுரியத் தன்மை யைப் பெறுவதில் எனக்கொன்றும் மறுப்பில்லை).

இருப்பினும், அப்பொல்லோ தமது கணிசமான தாலந்து களைத் தேவனுடைய ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்தமைக் காக நான் அவரை(அப்பொல்லோவை)ப் போற்றுகின்றேன். அவர் வசனத்தைப் படிப்பதற்கென்று தமது புத்திக் கூர்மை யைப் பயன்படுத்தினார். அவர் "கர்த்தருடைய மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டவரும்"[6] (வ. 25), "[பழைய ஏற்பாட்டு] வேதாகமங்களில் வல்லவருமாய்" (வ. 24) இருந்தார். எவரொரு வரும் தம்மைப் "பிரசங்கியார்" என்று அழைத்துக் கொள்ள முதல் தகுதியானதை - புத்தகத்தைப் பற்றிய அறிவை - அவர் பெற்றிருந்தார்! மற்றும், பேசுவதில் அவருக்கிருந்த திறமையை, வசனத்தை அறிவிப்பதற்கென்று அவர் ஒப்புக் கொடுத்திருந் தார். அவர் ''ஜெப ஆலயத்தில்'' (வ. 26) ''கர்த்தருக்கு அடுத்தவைகளை" (வ. 25) பேசினார். வெறுமனே பேசுவதுடன் அவர் திருப்தியடைந்து விடவில்லை என்பதில் அவரது ஒப்புக்

கொடுத்தலின் மாபெரும் அளவைக் காணுகின்றோம். பிரசங்கிக்கையில் அவர் "ஆவியில் அனலுள்ளவராய்"[7] (வ. 25) மற்றும் "தைரியமாய்" (வ. 26) பேசினார் (ரோமர் 12:11).

வசனம் 24 முதல் 26 வரையுள்ள பகுதியானது பிரசங்கித்தல் பற்றிய சிறிய பாடமாகப் பயன்படுத்தப்பட முடியும். இருப்பினும், நீங்கள் ஒரு பிரசங்கியாராக இல்லாதிருந்தாலும், அப்படிப்பட்டவராவதற்குத் திட்டம் எதுவும் இல்லாதிருந் தாலும், தேவனுடைய மகிமைக்கென்று உங்கள் தாலந்துகளை ஒப்புவிப்பது அப்பொழுதும் உங்களுக்கு ஏற்புடையதாகவே உள்ளது. உங்கள் தனிப்பட்ட சுயநல நோக்கங்களுக்காகத் தேவன் உங்களுக்குத் திறமைகளை ஆசீர்வாதமாகக் கொடுத் திருக்கவில்லை. வாழ்க்கையில் உங்கள் பொறுப்புக்களை நிறைவேற்ற நீங்கள் அவைகளைச் சட்டரீதியாகப் பயன்படுத்த முடியும் (1 தீமோ. 5:8), ஆனால் உங்கள் தாலந்துகள் யாவும் கர்த்தருக்கு மகிமையைச் செலுத்துதல் என்ற நோக்கத்திற்கா கவே நிறைவாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை ஒரு பொழுதும் மறந்து விடாதீர்கள் (மத். 5:16).

## அவர் தாம் நம்பியதைத் தைரியமாக அறிவித்தார் (18:25, 26)

அப்பொல்லோவுக்கு நாம் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில், கர்த்தருடைய சித்தத்தைப் பற்றிய அவருடைய புரிந்து கொள்ளுதலானது வரையறைக்குட்பட்டதாக இருந்தது. மேசியாவைப் பற்றிக் கூறப்பட்டிருந்த வேதவசனங்கள் (வ. 28) உள்ளிட்ட பழைய ஏற்பாட்டு வேதவசனங்களை (வ. 24) அவர் அறிந்திருந்தார். ஓரளவிற்கு அவர் "கர்த்தருக்கு அடுத்தவை களைத் திட்டமாய்" பேசவும் போதிக்கவும் கூட முடிந்திருந்தது (வ. 25). இருப்பினும், அவர் "யோவான் கொடுத்த ஞானஸ் நானம் பற்றி மட்டுமே அறிந்தவராய் இருந்தார்" (வ. 25) என்று நாம் வாசிக்கின்றோம். இயேசுவைப் பற்றிய அவரது அறிவானது, யோவான்ஸ்நானன் அறிந்திருந்தவைகளுடன் வரையறைப்படுத்தப்பட்டிருந்தது. இயேசு தமது சபையைக் (மத். 16:16-19) கட்டுவதாக வாக்குத்தத்தம் கொடுப்பதற்கு முன்னதாகவே-இயேசு மரித்து, உயிர்த்தெழுந்து, பிரதான

*கட்டளையைக் கொடுத்து, பரலோகத்திற்கு ஏறிச் செல்வதற்கு நீண்ட நாட்கள் முன்னதாகவே-யோவான் கொலை செய்யப் பட்டிருந்தார் (மத். 14:1-12). பரிசுத்த ஆவியானவரின் வருகை யைப் பற்றி யோவான் பேசியிருந்தார் (மத். 3:11), ஆனால் வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றம் (அப். 1:4-8; 2:1-4), சபை நிலைநாட்டப்படுதல், அல்லது கிறிஸ்தவ ஆராதனை ஆகியவை பற்றி அவர் ஏதொன்றும் அறிந்திருக்க வில்லை.*

*அப்பொல்லோ எப்படி யோவானின் ஞானஸ்நானத்தை அறிந்தார் என்பதையோ அல்லது கர்த்தரைப் பற்றிய அவரது அறிவு ஏன் முழுமையற்றதாக இருந்தது என்பதையோ லூக்கா விளக்கவில்லை. ஒருவேளை யோவானின் ஊழியக்காலத்தில், அப்பொல்லோ பலஸ்தீனத்தில் இருந்திருக்கலாம், அவரது சீஷராய் ஆகியிருக்கலாம் (மத். 3:5, 6), அல்லது ஒருவேளை அவர், எகிப்துக்கு வந்திருந்த (யோவானுடைய) சீஷர்களில் ஒருவரால் போதிக்கப்பட்டிருக்கலாம்.*[8] *அவர் பலஸ்தீனத்தில் யோவானுடைய சீஷராகியிருந்தால், ஒருவேளை தாம் புரிந்து கொண்ட நற்செய்தியைப் பரப்புவதற்காக விரைவிலேயே அந்நாட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றிருக்கலாம். எவ்வகை யிலும், பெந்தெகொஸ்தே நாளன்று (அப். 2) அப்பொல்லோ பலஸ்தீனத்தில் இல்லை என்பது உறுதி, மற்றும் இயேசுவையும் அவரது வழியையும் பற்றிய முழுமையான அறிவுடையவர் களிடத்தில் அவர் தொடர்பு கொண்டிருந்ததில்லை என்பதும் உறுதியானதே.*[9] *ஆகையால் அவர் அறிந்திருந்த விஷயமான யோவானின் ஞானஸ்நானம் பற்றி அவர் பிரசங்கித்தார்.*

*யோவானின் ஞானஸ்நானம் பற்றிய சில வார்த்தைகள் ஒழுங்கமைவுடன் உள்ளன. மேசியாவுக்கு வழியை ஆயத்தப் படுத்துதல் என்ற தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாகவே யோவான் வந்தார் (ஏசாயா 40:3; மல்கியா 4:5, 6; மத்தேயு 3:1-3; 17:10-13). அவரது ஆயத்த ஊழியத்தின் ஒரு பகுதியாக, அவர் தம்முடைய பிரசங்கத்தைக் கேட்டவர்களிடத்தில் மனந் திரும்பி வாழ்வை மாற்றிக் கொள்ளும்படி கட்டளையிட்டார் (மத். 3:2; லூக். 3:7-14), மற்றும் அவர் ஆயத்த ஞானஸ்நானம் ஒன்றையும் நடைமுறைப்படுத்தினார் (மத். 3:5, 6). அவர் கொடுத்தது முழுகுதலாகவும் (யோவா. 3:23), "பாவமன்னிப்புக் கென்று" (மாற். 1:4) மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானமாக*

வும் இருந்தது. அது “மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம்” (மாற். 1:4; அப். 13:24; 19:4) என்று அழைக்கப்பட்டது, ஏனென்றால் அது மனந்திரும்புதலைத் தனக்குள் கொண்டு, அதை விளக்கப்படுத்துவதாய் இருந்தது. அவரிடத்தில் வந்தவர்கள், “தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்” (மத். 3:6). “ஸ்நானன் [அதாவது முழுக்காட்டுபவர்]” என்றே யோவான் அறியப்படுமளவுக்கு அவரது ஊழியத்தில் ஞானஸ்நானம் மிக முக்கியமான பாகமாய் இருந்தது (மத். 3:1). “ஸ்நானன்” என்பது “ஸ்நானப்படுத்துபவர் [அதாவது முழுக்காட்டுபவர்]” என்ற நேரடி அர்த்தம் கொண்டதாயிருக்கின்றது. யோவானின் ஊழியத்தின் போது, அவர் கொடுத்த ஞானஸ்நானமானது, தேவனுடைய நோக்கங்களை ஏற்றுக்கொள்ள விரும்பியவர் களையும் அதை ஏற்றுக்கொள்ள விரும்பாதவர்களையும் பிரிக்கும் ஒரு கோடாக இருந்தது (லூக். 7:30).

நமது தற்போதைய பாடத்தைப் பொறுத்தமட்டில், நினைவுகூர வேண்டிய திறவுகோல் உண்மையாக உள்ளது எதுவென்றால், கிறிஸ்தவ யுகத்திற்கான தேவனுடைய திட்டத்தில் யோவானின் ஞானஸ்நானமானது நிரந்தரமான பாகமாய் இருக்கவில்லை என்பதேயாகும். பிரதான கட்டளை யின் ஞானஸ்நானமானது, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே, கொடுக்கப்படுகிறதாகவும் (மத். 28:19, 20; மாற். 16:15, 16) அது “உலகத்தின் [கிறிஸ்தவ யுகத்தின்] முடிவு பரியந்தம்” (மத். 28:20) கொடுக்கப்பட வேண்டியதாகவும் இருக்கின்றது. ஆகையால் தேவனுடைய திட்டம் மற்றும் நோக்கத்தில் இப்பொழுது “ஒரே ஞானஸ்நானம்” (எபே. 4:5) என்பதே பங்கு வகிக்கின்றது. பிரதான கட்டளையின் ஞானஸ்நானம் பிரசங்கிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் வரை மட்டுமே (அப். 2) யோவானின் ஞானஸ்நானம் செல்லத்தக்கதாயிருந்தது; அதன் பிறகு அந்த (யோவானின்) ஞானஸ்நானம் செல்லத் தகாததாயிற்று. இயேசுவைப் பற்றிய முழுமை பெறாத அறிவின் அடிப்படையில் முன் கூறப்பட்ட தென்பதே யோவானின் ஞானஸ்நானத்தில் இருந்த முக்கிய குறைபாடாகும். யோவான் தம்மைப் பின்பற்றியவர் களிடத்தில், “தனக்குப் பின் வருகிறவராகிய கிறிஸ்துவில்

*விசுவாசிகளாயிருக்க வேண்டும் ...” என்று மட்டுமே கட்டளை யிட முடிந்திருந்தது (19:4).*[10]

*இருப்பினும், அப்பொல்லோ அறிந்த ஞானஸ்நானமானது செல்லத்தக்கதாயில்லாத ஞானஸ்நானமாயிருந்தாலும், அவர் தாம் விசுவாசித்ததை உறுதிப்பாட்டுடனும் வைராக்கியத் துடனும் பிரசங்கித்தார் என்று உண்மையை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். அடுத்த அதிகாரத்தின் தொடக்கப் பகுதியானது, அவர் எபேசுவில் பிரசங்கிக்கையில் பலரை மனமாறச் செய்திருந்தார் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது (19:1-6).*

*அப்பொல்லோ தவறானதைப் பிரசங்கித்ததால் நான் அவரைப் போற்றவில்லை என்பதை இவ்விடத்தில் நான் அவசரமாய்க் கூறிக் கொள்கின்றேன்; தவறானது, ஆத்துமா வைத் தப்பிப் போகச் செய்து விடும் (யாக். 5:20). மேலும் அவர் தமது அறியாமையின் மூலம் தேவனைப் பிரியப்படுத்தினார் என்று நான் நம்பவில்லை; அறியாமையானது குற்றத்தை மட்டுப்படுத்தி விடாது (அப். 17:30; ரோமர் 10:1-4ஐயும் காணவும்). அப்பொல்லோ தமது தவறிலேயே தரித்திருக்க வில்லை என்றும், ஏனெனில் அவர் போதிக்கப்படக்கூடிய ஒரு இருதயத்தைக் கொண்டிருந்தார் என்றும் அதனால் தான் நான் அவரை அதிகமாய்ப் போற்றுகின்றேன் என்றும் விரைவிலேயே நான் வலியுறுத்தப் போகின்றேன். இக்கணத்தில், அவர் தமது உறுதிப்பாடுகளில் நிலைநின்ற ஒரு மனிதர் என்பதால் நான் அவரைப் பாராட்டுகிறேன் என்பதைக் கூறிக் கொள்கின்றேன். நான் எனது தொலைகாட்சியில் நிகழ்ச்சியைக் காணத் திருப்பும் போது, பலவகைப்பட்ட மதங்களினால் மாறுபாடில்லாமல் தாக்கப்படுகின்றேன். சில பிரசங்கியார்கள் தவறானதைக் கூறினார்கள் என்று அறிந்த போதிலும் அவர்களுக்கு நான் மரியாதை செலுத்தக் கூடும்; அவர்கள் செய்வதில் உண்மையா யிருக்கின்றார்கள் என்பது உறுதி. மற்றவர்களுக்கு நான் இவ்விதமாய் மரியாதை செலுத்தவே முடியாது; சுவிசேஷத்தை வியாபாரமாக்கும் அவர்கள் செய்யும் காரியங்கள், அவர்கள் நேர்மையற்ற சமயோசிதவாதிகள் என்பதை அறிவிக்கின்றன (மத். 7:20; 2 பேது. 2:3).*

*உண்மையாயிருத்தல் மட்டும் போதுமானதல்ல - கிறிஸ்தவர்*

களை உபத்திரவப்படுத்திய போது பவுல் உண்மையானவராகத் தான் இருந்தார் (அப். 23:1) - ஆனால் மாய்மாலம் நிறைந்த உலகத்தில், உண்மையான திட நம்பிக்கையுடன் இருக்கும் மக்களைக் காண்பதற்கு உற்சாகமாயிருக்கின்றது. குறிப்பிட்ட ஒரு உலகத் தலைவர் பொதுமக்களின் வாக்குப்படியே ஆட்சி செய்தார் என்று கூறப்படுகின்றது, மதத் தலைவர்கள் சிலரும் அதே கொள்கையின் அடிப்படையில் செயல்படுகின்றார்கள். அவர்கள், வெகுஜனக் கருத்து என்ற "... பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாய்'' (எபே. 4:14) இருக்கிறார்கள். எதிர்ப்பின் மத்தியில் தமது மத நம்பிக்கைக்காக உறுதியாய் நிற்கும் ஒரு மனிதரை நான் பார்க்கும்போது, "கர்த்தருடைய வழியைப் பற்றி இவருக்கு மிகச் சரியாகப் போதிக்கப்பட்டால், இவர் எவ்வளவு மிகச் சிறந்த ஊழியக்காரராய் இருப்பார்!" என்று நான் நினைப்ப துண்டு. இதுவே அப்பொல்லோவிடத்தில் மிக அதிகமாய்ப் போற்றக்கூடிய பண்பினிடம் நம்மைக் கொண்டு வருகின்றது.

## அவர் தாம் தவறானவராயிருந்தார் என்பதை ஒப்புக் கொள்வதற்கு மிகவும் பெருமையுள்ளவராய் இருக்கவில்லை (18:26)

ஒரு ஓய்வுநாளில், ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் எபேசுவில் இருந்த ஜெப ஆலயத்திற்குச் சென்றார்கள்.[11] கூடாரத் தொழிலாளர்களாயிருந்த இந்த ஆக்கில்லாவையும் பிரிஸ்கில்லாளையும் நாம் முன்னதாக 18ம் அதிகாரத்தில் சந்தித்தோம், இவர்கள் பவுலின் தோழர்களும், அவர் சீரியாவின் அந்தியோகியாவுக்குப் புறப்பட்டுச் சென்றபோது எபேசுவி லேயே தங்கிவிட்டவர்களாகவும் இருந்தார்கள் (வ. 19). அநேகமாக இதே ஜெப ஆலயத்தில்தான் இதற்கு முன்பு பவுலும் இதமான வரவேற்பைப் பெற்றிருக்க வேண்டும் (வ. 19-21). போதனைக்கான வேளை வந்தபோது, அவர்கள் ஆச்சரியப் படும்படியாக, அந்நியர் ஒருவர் எழுந்து நின்று, ''ஜெப ஆலயத்தில் தைரியமாய்ப் பேசத் தொடங்கினார்"[12] (வ. 26அ),

அவர் இயேசுவைப் பற்றிப் பேசினார் (வ. 25). பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாவும்[13] சொல் திறம் கொண்ட அப்பேச்சாளரைக் கவனித்தபோது, அவர் யோவானின் ஞானஸ்நானத்தை மட்டுமே அறிந்திருந்ததும், இரட்சகரைப் பற்றிய அவரது அறிவு முழுமையற்று இருப்பதையும் உறுதியாய் அறிந்து கொண்டார்கள். ஆராதனைக்குப் பிறகு, அவர்கள் "அவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்" (வ. 26ஆ). NIVயில், "அவர்கள் தங்கள் வீட்டுக்கு அவரை அழைத்து வந்து தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவருக்கு விவரித்துக் காண்பித்தார்கள்" (வ. 26ஆ) என்றுள்ளது. அவர்கள் யோவானின் முன்னுரைத்தல்களைக் கொண்டு தொடங்கி (மத். 3:11), அந்த முன்னுரைத்தல்கள் எவ்விதம் நிறைவேறின என்று காண்பித்தார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

ஒருவர் தவறானதைப் போதித்ததைக் கேட்ட பொழுது ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதைப் பற்றி ஒரு முழுமையான பாடத்தை நாம் போதிக்க முடியும்: (1) தவறொன்றைக் கேட்ட பொழுது அதை உணர்ந்து கொள்ளக் கூடிய அளவு போதுமான அறிவை அவர்கள் பெற்றிருந்தார்கள். (2) ஒருவர் "உண்மையுள்ளவராய் இருக்கும் வரையிலும்" தவறானதைப் போதிப்பது சரியானதே என்று அவர்கள் நம்பவில்லை. (3) "பவுல் இங்கிருந்து அவருக்குப் போதித்தால் நன்றாயிருக்குமே" என்று அவர்கள் கூறவில்லை; பிரசங்கியாரைப் போலவே, போதிக்கும் பொறுப்பு தங்களுக்கும் இருந்தது என்று அவர்கள் புரிந்து கொண்டார்கள். (4) அப்பொல்லோவின் சிறந்த பண்புகளில் அவர்கள் நம்பிக்கை கொண்டார்கள். அவர்கள் அவரை தவறானதைப் போதிக்கும் ஒரு நேர்மையற்றவர் என்று கருதவில்லை; அவர் நேர்மையான இருதயமும், அறிவுரையை ஏற்றுக் கொள்ளும் தன்மையும் கொண்டவர் என்று கண்டார்கள் என்பது உறுதி. (5) அப்பொல்லோவைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவதற்குப் பதிலாக, அவரிடத்தில் அவர்கள் தனித்துச் சென்றார்கள் (மத். 18:15). (6) அவர்கள் அப்பொல்லோவை வெளியரங்கமாகச் சங்கடப்படுத்தவில்லை; மாறாக விஷயத்தை அவர்கள் அந்தரங்கமாகக் கையாண்டார்கள்,

“அவரைச் சேர்த்துக் கொண்டு” - அநேகமாகத் தங்கள் வீட்டுக்கு அவரை அழைத்துச் சென்றார்கள். (7) அவர்கள் தங்களின் அணுகுமுறையில் இரக்கத்துடனும், மென்மையுடனும் இருந்தார்கள் (கலா. 6:1). தவறைப் போதித்தார் என்பதால் அவரிடம் வீராவேசமாகப் பேசுவதற்குப் பதிலாக, அவர்கள் “தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்.” (8) “அதிக திட்டமாய்” என்பதில் உள்ள ‘‘அதிக’’ என்ற சிறுமாற்ற வார்த்தையானது, அப்பொல்லோ போதித்தவற்றில் பெரும் பான்மையானவை சரியானதாயிருந்தது என்று அவர்கள் ஒப்புக் கொண்டதாக எனக்குக் கூறுகின்றது. இவ்விதமாக, அப்பொல்லோவின் தவறுக்காக அவரைத் தாக்குவதற்குப் பதிலாக, அவரிடத்தில் ஏற்கனவே இருந்த சத்தியத்தை அவர்கள் கட்டியெழுப் பினார்கள். இவ்விதமான அணுகுமுறையின் விளைவாக, கர்த்தருக்கென்று மிகப் பெரும் மதிப்புள்ள ஒரு ஊழியக்காரர் உருவானார்.

ஆயினும், இக்கணத்தில் நாம், ஊழியக்காரரின் நிலை யிலிருந்து இந்நிகழ்ச்சியைக் கண்ணோக்குவோம். அறிவுமிக்க, சொல் திறம் கொண்ட பேச்சாளரான அப்பொல்லோ என்று உங்களை நீங்கள் கற்பனை செய்து கொள்ளுங்கள். ஜெப ஆலயத்தில் நீங்கள் உங்கள் இருதயத்தை ஊற்றி, உங்கள் உரையைக் கேட்பவர்கள் நம்பும்படியாக முயற்சி செய்து பிரசங்கிக்கின்றீர்கள். ஆயினும் உங்கள் உரையைக் கேட்டவர் களின் கடினமான முகத்தோற்றத்தில் இருந்து, அவர்களில் பலர் கடின இருதயம் கொண்டவர்களாயிருப்பதைத் தெளிவாய்க் காணுகின்றீர்கள். ஆராதனைக்குப் பிறகு, நீங்கள் சக்தியிழந்து போய், நம்பிக்கையற்ற உணர்வடைகின்றீர்கள்; பிறகு ஒரு தம்பதியர் உங்களை, அவர்களுடன் வீட்டுக்கு வருமாறு அழைக்கின்றார்கள். அவர்கள் வீட்டில் நீங்கள் ஓய்வாக இருக்கும் பொழுது, உங்கள் பிரசங்கத்தை நோக்கி உரையாடல் திரும்புகின்றது. உங்கள் பிரசங்கத்தில் பிழைகள் நிறைந்துள்ள தாக அத்தம்பதிகள் துணிச்சலுடன் ஆலோசனை தெரிவிக்கின் றார்கள்! நீங்கள் எவ்வித பதில்செயல் காட்டுவீர்கள்? பின்வருமாறு பதில்செயல் செய்வது அப்பொல்லோவுக்கு எளிதாயிருந்திருக்கும்: “என்னை விமர்சிக்கும் நீங்கள் உங்களை

யாரென்று நினைத்துக் கொள்கின்றீர்கள்? நான் அலெக்சாந்திரி யாவிலும் எருசலேமிலும், உயிருடன் இருப்பவர்களில் மாபெரும் ஆசிரியர்களின் பாதத்தில் அமர்ந்து கற்றுக் கொண்டவன்! நீங்கள் எப்பொழுதும் அறிந்ததைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகமாக வேதவசனங்களைப் பற்றி நான் அறிந்துள்ளேன்! எனக்கு அறிவுரை கூறலாம் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா?"

பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாவும், அப்பொல்லோவுக்கு "தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய்" விவரித்து காண்பிக்க முடிந்தது என்ற உண்மையானது, அப்பொல்லோ வின் இருதயம் பற்றிய உள்நோக்கை நமக்குத் தருகின்றது. அவர் நன்றாகக் கற்றவராயிருந்தும், தாம் எல்லாம் அறிந்திருந்ததாக அவர் நினைக்கவில்லை. அவர் திடநம்பிக்கை கொண்டவரா யிருந்தும், அவைகளைத் தைரியமாய் அறிவித்திருந்தும், திறந்த மனமும், கவனிப்பதில் விருப்பமும் உள்ளவராகவும் இருந்தார். மிக முக்கியமாக, அவர் சத்தியத்தை நேசித்தார் (2 தெச. 2:10); அவரது பெருமையைக் காட்டிலும் சத்தியம் அவருக்கு மிகவும் முக்கியமானதாய் இருந்தது. இவ்விதமாக, பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாவும் அவருக்குப் போதித்த போது, அவர் தாம் தவறான கருத்துக் கொண்டிருந்ததை ஒப்புக் கொண்டார். இவை ஒரு மனிதரிடத்தில் இருக்கக் கூடிய அரிதான பண்புகள் ஆகும்.

அப். 18:24-26 வசனப் பகுதியானது விவாதிக்கப்படும் போது, பொதுவாக இவ்விடத்தில் யாரேனும் ஒருவர், "அடுத்த அதிகாரத்தில் சில சீஷர்கள் செய்தது போல - அப்பொல்லோவும் மறு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்ததா?" என்று கேட்பார்கள். இக்கேள்வியானது எப்பொழுதுமே, ஒரு மணி நேர விவாதத்திற்கு ஏற்புடையதாகும்,[14] அந்தக் கலந்துரை யாடலின் முடிவில் யார் ஒருவரும் அதிக ஞானம் பெறுவ தில்லை. இதை நமக்குக் கூறுவது தகுதியானதென்று லூக்கா காணவில்லை - இது அநேகமாக நம்மை நேரடியாகப் பாதிப்பதில்லை என்பதற்காகவே இருக்கும் (இயேசு மரிப்ப தற்கு முன் யோவானின் ஞானஸ்நானம் பெற்றவர்கள் யாரும் இச்சமயத்தில் உயிருடன் இருக்கவில்லை). நாம் உறுதியாகக் கூற முடிந்ததெல்லாம், அப்பொல்லோ ஞானஸ்நானம்

பெறுவது தேவையென்றால் அவர் பெற்றார்; தேவையில்லை யென்றால் அவர் பெறவில்லை என்பதேயாகும். நமது வேதவசனப் பகுதியில், இந்தப் பிரசங்கியார் தேவனைப் பிரியப்படுத்துவதற்குத் தேவையான எல்லாவற்றையும் செய்வதற்கு மன விருப்பமாயிருந்தார் என்பது தெளிவாய்க் காணப்படுகின்றது.

நம்மைப் பற்றி என்ன? அப்பொல்லோவைப் போன்ற நேர்மையான இருதயத்தை நாம் பெற்றிருக்கின்றோமா? நமக்குப் போதிக்கப்பட முடியுமா? நாம் திறந்த மனதுள்ளவர் களாய் இருக்கின்றோமா? நமது பெருமையை விழுங்கிக் கொண்டு, நாம் எப்பொழுதும் நம்பியிருக்கின்றவைகள் சத்தியத்திற்கு முரண்படும் போது, நமது தவறை ஒப்புக் கொள்ளுகின்றோமா?

## அவருடைய ஊழியத்தில் அவர் தொடர்ந்து வளர்ந்தார் (18:27, 28)

நான் சிலருக்கு "தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய்" போதித்திருக்கின்றேன், அவர்கள், நான் போதித்தது சத்தியம் என்று ஒப்புக் கொண்டாலும், மாற மறுத்தார்கள். ஏனென்றால் தங்கள் குடும்பத்தார், நண்பர்கள் அல்லது மற்றவர்கள் என்ன கூறுவார்கள் அல்லது செய்வார்கள் என்பது பற்றி அவர்கள் பயந்திருந்தார்கள். இதற்கு மாறாக, அப்பொல்லோ தாழ்மையின் விலையைச் செலுத்த மனதா யிருந்தார். அடுத்த ஓய்வுநாளில் அவர் ஜெப ஆலயத்திற்குத் திரும்பச் சென்று, பல திறவுகோல் கருத்துக்களில் தாம் தவறாய் இருந்ததை அறிக்கையிட்டு, பிறகு தாம் கற்றுக் கொண்ட புதிய சத்தியங்களைத் தைரியமாய் அறிவித்தார் என்று கற்பனை செய்கின்றேன். நம்மில் சிலரைப் போல இல்லாமல், இந்தப் பிரசங்கியார் தமது அறிவிலும், எஜமானுக்கான ஊழியத்திலும் தொடர்ந்து வளர்ந்தார்.

சில காலத்திற்குப் பின், அப்பொல்லோ கிரேக்க நாட்டில் பவுல் கடைசியாய் ஊழியம் செய்திருந்த அகாயாவின்மேல் தமது பார்வையை வைத்தார். "பின்பு அவன் அகாயா நாட்டிற்குப் போக வேண்டுமென்றிருக்கையில், சீஷர்கள்[15]

அவனை ஏற்றுக் கொள்ளும்படி[16] சகோதரர்[17] அவர்களுக்கு எழுதினார்கள்" (வ. 27). பவுல் ஊழியம் செய்திருந்த கொரிந்து நகரமே அப்பொல்லோவின் அடைவிடமாய் இருந்தது (19:1).

அப்பொல்லோ கொரிந்து நகரைச் சென்று சேர்ந்த போது, அங்கு ஏற்கனவே கிறிஸ்தவர்களாய் இருந்தவர்களுக்கும், கிறிஸ்தவர்களாகும்படியான அவசியம் இருந்தவர்களுக்கும் ஊழியம் செய்தார். முதலாவது, அவர் "கிருபையினாலே விசுவாசிகளான" சபையில் இருந்தவர்களுக்கு "மிகவும் உதவியாயிருந்தான்" (18:28ஆ). கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்ததை அவர் கண்டார் (1 கொரி. 1:12; 3:4, 22; 4:6).[18] மேலும் அவர், "வெளியரங்கமாக யூதர்களுடனே பலமாய்த் தர்க்கம் பண்ணி னார்" (அப். 18:28அ), இதற்கு அவர் தாம் பிரிஸ்கில்லாள் மற்றும் ஆக்கில்லாவிடம் கற்றிருந்ததை நன்முறையில் பயன்படுத்திக் கொண்டார், "இயேசுவே கிறிஸ்து என்று வேதவாக்கியங் களைக் கொண்டு திருஷ்டாந்தப்படுத்தி"னார் (வ. 28ஆ). இவர்கள் பவுலை வெறுத்து கல்லியோன் முன்னிலையில் நிறுத்திய அதே யூதர்கள்தான் (வ. 12-17). பவுலைக் காட்டிலும் அப்பொல்லோ இவர்களிடத்தில் அதிக வெற்றியடைந் திருப்பார். அப்படியிருந்தால், இது மாறுபட்ட திறமைகளு டைய பிரசங்கியார்களைச் சபையில் கொண்டிருப்பதன் மதிப்பைக் காட்டுகின்றது. இவ்விடத்தில் விரோதமோ பொறாமையோ இருந்ததற்கான குறிப்பெதுவும் லூக்காவின் வார்த்தைகளில் இல்லை என்பது உறுதி. பின்னாளில் பவுல் கொரிந்தியருக்குப் பின்வருமாறு எழுதினார்: "பவுல் யார்? அப்பொல்லோ யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்த படியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர் தானே. நான் நட்டேன், அப்பொல்லோ நீர் பாய்ச்சினான், தேவனே விளையச் செய்தார்" (1 கொரி. 3:5, 6).

நீங்களும் நானும், வேதவசனங்களைப் புரிந்து கொள்ளு வதிலும், ராஜாவின் ஊழியத்திலும் இன்னும் வளர்ந்து கொண்டிருக்கின்றோமா? நமது பழைய மனநிறைவிலேயே நாம் நின்று விட வாய்ப்புள்ளதா? அப்படியிருந்தால் இயேசு நம்மிடம், "வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்

பாருங்கள்'' (யோவா. 4:35) என்றும் ''அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்" (மத். 9:37) என்றும் கூறுவார். அவரது அறுவடையில் பயனுள்ள ஊழியக்காரர்களாய் வளருவதற்குக் கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக!

## முடிவுரை

அப். 18:23-19:1 தான் நாம் நடபடிகளின் புத்தகத்தில் அப்பொல்லோவைப் பற்றிப் படிக்கும் முதலும் கடைசியுமான இடமாயிருக்கின்றது. ஒரு நேரத்தில், அவர் எபேசு நகரத்திற்குத் திரும்பினார் என்பது உறுதி, அங்கு அவர் பவுலின் நண்பரானார் (1 கொரி. 16:12). மிகவும் பின்னாளில், அவரும் இன்னொரு சகோதரரும் பவுலின் உதவியாளர்களில் ஒருவராகிய தீத்து இருந்த இடமாகிய கிரேத்தாவுக்குச் செல்வதற்குத் திட்டமிடப்பட்டது (தீத்து 3:13). இதற்கப்பால் அப்பொல்லோவின் மற்ற ஊழியங்கள் பற்றி நாம் எதுவும் அறிவதில்லை. ஆயினும், அவர் தமது தாலந்துகளில் கணிசமானவற்றை, இயேசுவைப் பற்றி நற்செய்தியைப் பரப்புவதில் தொடர்ந்து பயன்படுத்தினார் என்று நான் நம்புகின்றேன்.

இப்பாடத்தின் மூலம் நாம் அப்பொல்லோவின் வரலாற்றில் இருந்து பல பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும் என்பதை நான் சுட்டிக்காட்டினேன். முடிக்கும் இந்நேரத்தில் அவைகளில் இரண்டை உங்களுக்கு நான் நினைவூட்டுகின்றேன்: (1) யாரேனும் ஒருவர் தவறானதைப் போதிக்கிறார் அல்லது பிரசங்கிக்கிறார் என்று நாம் கேள்விப்படும் போது, நாம் அவர்களைப் பிரிஸ்கில்லாள் மற்றும் ஆக்கில்லாவின் உணர்வு நிலையுடன் அணுகுவோம். (2) தேவனுடைய வழி பற்றி நாமே இன்னும் அதிக திட்டமாய் அறிவுறுத்தப்பட வேண்டியது அவசியமானால், நாம் அப்பொல்லோவின் தாழ்மையைப் பெற்றிருக்க வேண்டும். நம்மில் அதிகமானவர்கள், பிரிஸ்கில்லாள், ஆக்கில்லா மற்றும் அப்பொல்லோ ஆகியோரின் இனிய ஆவிகளைப் பெற்றிருந்தால், இவ்வுலகில் நிறைந்துள்ள மதக் குழப்பங்களும் பிரிவினைகளும் மறைந்து விடும்.

அப்பொல்லோவின் பண்புகளைப் பற்றி கற்றுக் கொள்ளும் பாடமாக இதைப் பயன்படுத்த நீங்கள் விரும்பலாம்.

அப்படியிருந்தால், அவருடைய பிந்திய ஊழியத்தை, விசேஷமாக கொரிந்துவில் அவரது ஊழியத்தைக் கொண்டு இதை விரிவாக்குங்கள். மார்ட்டின் லூத்தரும் (மற்றவர்களும்) எபிரெயருக்கு எழுதிய நிருபம் அப்பொல்லோவினால் எழுதப்பட்டிருக்கும் என்று நம்பிய உண்மையை நீங்கள் உள்ளடக்க விரும்பலாம். அவர்கள் இப்படி நம்பியதற்குக் காரணம், அந்த நிருபத்தின் தர்க்கங்கள் யாவும் அலெக்சந்திரியா நகரில் சொல்லணிக்கலை வகுப்பில் போதிக்கப்பட்ட தர்க்கவியலின் மாதிரியிலேயே அமைந்துள்ளன. இது உண்மை யாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், இப்படிப்பட்ட மிகச் சிறந்த படைப்பொன்றை அப்பொல்லோவினால் எழுத முடியும் என்று சிலர் நினைக்கின்ற உண்மையானது அவரது திறமைக்குச் சாட்சியளிக்கின்றது.

நடபடிகள் புத்தகத்தில் மனமாற்றங்கள் பற்றி ("அப்போஸ்தலருடைய நடபடிகள் பாகம் 1" இதழில் காணவும்) நீங்கள் தொடர் பிரசங்கங்கள் பிரசங்கிக்க முடிவு செய்தால், இப்பாடத்தின் விஷயங்களை "பிரசங்கியார் ஒருவரின் மனமாற்றம்" என்ற தலைப்பில் தழுவியமைக்கலாம். ("மனமாற்றம்" என்பது "மாற்றம்" என்ற நேரடி அர்த்தம் உள்ளது என்பதை நினைவில் வையுங்கள் ["அப்போஸ்தலருடைய நடபடிகள் பாகம் 2" இதழில் காணவும்].) நீங்கள் பயன்படுத்தக் கூடிய எளிய புறக்குறிப்பு இதோ:

I. மனமாற்றம் தேவையாயிருந்த ஒரு பிரசங்கியார்
   - அ. இந்தப் பிரசங்கியாரிடத்தில் பல அருமையான பண்புகள் இருந்தன.
   - ஆ. ஞானஸ்நானம் பற்றிய கொள்கையில் அவர் தவறாயிருந்தார்.

II. மனமாற்றப்பட்ட ஒரு பிரசங்கியார்
   - அ. அவரது தவறுக்காக அவரை எதிர்த்து நிற்கப் போதுமான அளவு அக்கறை கொண்டவர்கள் சிலர் இருந்ததால் அவர் மனமாற்றப்பட்டார்.
   - ஆ. அவர் தாம் தவறாயிருந்ததை ஒத்துக் கொள்ளக்

கூடிய அளவு பெரிய மனம் இருந்ததால் அவர் மனமாற்றப்பட்டார்.

வசனங்கள் 24 முதல் 26 வரையுள்ள பகுதியானது இளம் பிரசங்கியார்களுக்கு மதிப்புள்ள ஒரு பாடம் தருவதற்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்பட முடியும். இதன் கடைசிக் கருத்தாக, "நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டியது எப்பொழுதும் ஏதாவது ஒன்று இருக்கின்றது" என்று இருக்கும்.

பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாவும் அப்பொல்லோவுக்கு எவ்விதத்தில் அறிவுரை கூறினார்கள் என்பது பற்றித் தரப்பட்ட எட்டுக் கருத்துக்களை, "தவறு செய்கிறவர்கள்மேல் அக்கறை யாயிருத்தல்" (ரிக் ஆட்ச்லீயினால் பயன்படுத்தப்பட்ட ஒரு தலைப்பு) என்ற ஒரு பாடமாக விரிவாக்கம் செய்ய முடியும். தவறு செய்கின்றனர் என்று நான் நம்பியவர்களிடத்தில் சில வேளைகளில் நான் எப்படி அணுகினேன் என்பதை நினைக்கையில் பின்வாங்கிப் போவதுண்டு. "மென்மையாக" இல்லாமல் சாமர்த்தியமாக நடந்து கொள்ளும் சாத்தியக் கூறும் இருக்கின்றது.

குறிப்புகள்

[1]"பிறந்தவன்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை "இனத்தவன்" என்ற நேரடி அர்த்தமுள்ளதாகும், இது அப்பொல்லோ, அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்து அங்கேயே வளர்க்கப்பட்டுமிருந்தார் என்ற அர்த்தம் தருகின்றது. [2]"சாதுரியவான்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை "கற்றறிந்தவன்" என்றும் அர்த்தம் தரும் (NIVயில் காணவும்). [3]"அப்பொல்லோனியஸ்" என்பதன் சுருக்க வடிவம் "அப்பொல்லோ" என்பதாகும். [4]அலெக்சந்திரியா என்பது உலகத்தின் கல்வி மையங்களில் ஒன்றாக இருந்தது. உலகிலேயே மிகப் பெரிய நூலகம் - 700,000 வரையிலான நூல்களைக் கொண்டது - அங்கிருந்தது. [5]பவுல் மற்றும் அப்பொல்லோ ஆகியோரின் பின்னணிகள் பல வழிகளில் ஒன்று போலவே இருந்தன: பவுல் தர்சுவில் பிறந்தார், இதுவும் கற்றலின் மையமாகவே இருந்தது. இருவருமே மிக அதிகமான தாலந்துகள் பெற்ற, தேவனுக்கு தங்களை ஒப்புக் கொடுத்த மனிதர்களாய் இருந்தார்கள். மற்றும், முதலாவது நாம் அவர்களைச் சந்திக்கையில் இருவருமே தவறாயிருந்தார்கள். [6]"மார்க்கத்தில்" என்ற சொற்றொடர் கிறிஸ்தவத்தைக் குறிப்பிடப் பயன் பட்டது, ஆனால் "கர்த்தருடைய மார்க்கம்" என்ற சொற்றொடரானது

யோவான் ஸ்நானனின் போதகத்தை மட்டுமே வரையறைப்படுத்தியதாகக் காணப்படுகின்றது (மத். 3:3; மாற். 1:3; லூக். 3:4; யோவா. 1:23). [7]ஒரு சில "தனிப்பட்ட" மொழிபெயர்ப்பாளர்கள் இச்சொற்றொடரை "ஆவியானவரில் அனலுள்ளவராய்" (அதாவது பரிசுத்த ஆவியானவரில்) என்று கொடுக்கின்றார்கள். இச்சொற்றொடரின் இன்னொரு பயன் பாட்டை ரோமர் 12:11ல் காணவும். [8]அப்பொல்லோ, யோவானின் ஞானஸ் நானம் பற்றி அலெக்சந்திரியாவில் அறிந்தார் என்று மேற்கத்திய வசன நூல் சுட்டிக் காட்டலாம். எனது ஆசிரியரான J.W. ராபர்ட்ஸ் அவர்கள், உலக எழுத்தாளர்கள் சிலரின் கருத்துப்படி, யோவான் ஸ்நானனின் சீஷர்களில் சிலர் இயேசுவை மேசியா என்று ஒப்புக் கொள்ளவில்லை யென்றாலும், அவர்கள் "யோவானின் நற்செய்தியையே" தொடர்ந்து பிரசங்கித்தார்கள் என்றும் கூறினார். [9]யோவான் பிரசங்கித்து இருபந்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகி விட்டிருந்ததால், இது ஒரு புதிராகவே உள்ளது; ஆனால் இந்த ஆண்டுகளில் அவர் கிறிஸ்தவர் எவருடனும் தொடர்பு கொள்ளவில்லை என்பது உறுதியாகும். ஆயினும் இதில் உள்ள நீண்ட காலமானது, அப்பொல்லோ சமீபத்தியமாயிருந்த ஆண்டுகளில் யோவானின் சீஷர்களில் ஒருவரிடத்திலிருந்து ஞானஸ்நானம் பற்றிக் கற்றிருக்கலாம் என்றும், பல ஆண்டுகளுக்கு முன் யோவானிடம் அதை அவர் கற்றிருக்க மாட்டார் என்றும் சுட்டிக்காட்டுகின்றது. [10]யோவானின் ஞானஸ்நானம் பற்றி இன்னும் அதிகமான கருத்துக்களை அடுத்த பாடத்தில் காணலாம்.

[11]அவர்கள் அங்கு ஆராதிக்கச் சென்றார்கள் என்று பொதுவாகக் கருதப்படுகின்றது. ஒருவேளை அதற்காக அவர்கள் சென்றிருக்கலாம்; முன்பே குறிப்பிட்டபடி, அது மாறுதலின் காலகட்டமாக இருந்தது. இருப்பினும், ஒருவேளை அவர்கள் பவுல் கொண்டிருந்த அதே நோக்கத் திற்காக-தாங்கள் போதிக்கக் கூடிய நேர்மையான இருதயங்களைக் காணும்படிக்கு - அங்கு சென்றிருக்கலாம். [12]பவுலைப் போலவே அப்பொல் லோவும் புதிய சமூகம் ஒன்றில் தனது ஊழியத்தை ஜெப ஆலயத்திற்குச் சென்றே துவக்கினார் என்பது உறுதி. [13]மேற்கத்திய வசன நூலில் வசனம் 26ல் ஆக்கில்லாவின் பெயர்தான் முதலில் உள்ளது (KJV மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பில் காணவும்), ஆனால் சிறந்த கையெழுத்துப் பிரதிகளில், ஆதி சபையில் பிரிஸ்கில்லாளின் சிறப்பிடத்தைச் சுட்டிக்காட்டும்படியாக அவளது பெயரே முதலாவதாக உள்ளது. பிரசங்கியாரைத் திருத்துவதில் அவள் முனைப்புடன் செயல்பட்டது பற்றி கேள்வியெதுவும் எழுப்பப் படாதவாறு அவளது பெயர் முதலாவது எழுதப்பட்டது என்று சிலர் நம்புகின்றனர். வேறுவார்த்தைகளில் சொல்வதென்றால், ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அப்பொல்லோவைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்றிருந்தால், அங்கு ஆக்கில்லா மட்டும் அப்பொல்லோவுக்குப் போதிக்கும்படி விட்டு விட்டு, பிரிஸ்கில்லாள் காபியும், திண்பண்டமும் தயாரித்து வரும்படி சென்று விடவில்லை. (நான் ஒரு இளம் பிரசங்கியாராக இருந்த பொழுது, விசுவாசத்தில் உள்ள வயது முதிர்ந்த சகோதரிகள் சில விஷயங்களில் - "தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய்" எனக்கு விளக்குவதற்காக - என்னைத் திருத்துவது பொதுவாய் நடைபெற்றது.) ஆயினும், இது தனிப்பட்ட போதனை தானே தவிர, பெண்கள் பிரசங்க மேடையை நிரப்புவதை இது எந்த வகையிலும் நியாயப்படுத்துவதில்லை

*என்பதைக் கவனியுங்கள். [14]இயேசுவின் மரணத்திற்கு முன்பு, யோவானின் ஞானஸ்நானத்தைப் பெற்றவர்கள், சபை நிலைநாட்டப்பட்ட போது மறு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளத் தேவையில்லாதிருந்தது என்பதே எனது கருத்தாகும். வேறுவார்த்தைகளில் சொல்வதென்றால், தேவன் அவர்களைத் தாமாகவே "சபையில் நிலைப்படுத்திக் கொண்டார்." இதற்கான மிகச் சிறந்த எடுத்துக்காட்டு, யோவானின் ஞானஸ்நானத்தை நிச்சயமாகவே பெற்றிருந்த அப்போஸ்தலர்களே ஆவார்கள் (லூக். 7:29, 30; யோவா. 1:25-51; 3:22, 26; 4:1, 2). பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றார்களா என்பதில் எனக்குச் சந்தேகம் உண்டு. மற்றும், வசனம் 25ல் உள்ள "ஆவி" என்ற வார்த்தை பரிசுத்த ஆவியானவரைக் குறிக்குமென்றால் (அடிக் குறிப்பு எண். 7 ஐக் காணவும்), இது அப்பொல்லோ ஏற்கனவே ஒரு கிறிஸ்தவராயிருந்தார், அவர் ஞானஸ்நானம் பெற தேவையில்லை என்றும் சுட்டிக்காட்டிவதாயிருக்கும். இருப்பினும், இவ்விவாதம் முழுவதும் யூகத்தின் அடிப்படையிலானதே என்பதை நான் மறுபடியும் வலியுறுத்துகின்றேன், இதில் ஒருவருடைய கருத்து இன்னொருவருடைய கருத்தைக் கட்டுப்படுத்துவதாயிருக்கக் கூடாது. (இக்கேள்வியின் மேல் இன்னமும் அதிகமாய்க் கற்றுக் கொள்வதற்கு,* J.W. McGarvey, *New Commentary on Acts of the Apostles,* vol. 2 [Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.], *151, 152ல் காணவும். [15](*NASB *யில்* "the brethren encouraged him" *என்றுள்ளது). ஒரு சகோதரர் நற்செய்தி அறிவிக்க இன்னோர் இடத்துக்குப் போக விரும்பும் போது, நாமும் கூட அவரை அதைரியப்படுத்தாமல் ஊக்கப்படுத்துவோம் என்றே நான் நம்புகின்றேன். [16]ஒரு சபையிலிருந்து இன்னொரு சபைக்கு அறிமுகக் கடிதம் எழுதும் பழக்கத்திற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு ஆகும். கடிதத்தின் முடிவில் ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லாளின் பெயர்கள் இருந்த விஷயமானது கொரிந்து சபையில் அப்பொல்லோவைப் பற்றி நன்மதிப்பு ஏற்படுத்தியிருக்கும். [17]எபேசுவில் ஒரு சபை நிலைநாட்டப்பட்டிருந்ததை இது சுட்டிக்காட்டுகின்றது. "சகோதரர்" என்பது ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் மற்றும் பவுலினால் (அவரது குறுகிய விஜயத்தின் போது) மனமாற்றப் பட்டவர்கள் யாரேனும் இருந்திருந்தால் அவர்களையும் குறிப்பதாய் இருந்திருக்கும். அநேகமாய் அங்கு ஏற்கனவே ஆக்கில்லா, பிரிஸ்கில்லாளின் வீட்டின் சபை கூடிவந்திருக்கலாம் (1 கொரி. 16:19). [18]கிரேக்கர்கள் சொல் திறமையில் களிப்படைந்தவர்கள். பவுலைக் காட்டிலும் அப்பொல்லோவை சிலர் தேர்ந்து கொள்வதற்கு இது ஒரு காரணமாயிருக்கலாம் (1 கொரி. 2:1). இருப்பினும், அப்பொல்லோ தம்மைப் போற்றியவர்களைத் தனிக்குழுவா யிருக்கும்படி ஊக்கப்படுத்தியதாக குறிப்பெதுவும் இல்லை. பவுலும், அப்பொல்லோவும் போட்டியாளர்கள் அல்ல; அவர்கள் நெருங்கிய ஐக்கிய உறவை மகிழ்வுடன் அனுபவித்தார்கள் (1 கொரி. 16:12; தீத்து 3:13).*

## *வார்த்தையின் வல்லமை*

*ஒரு சபைக்கு அழைக்கப்பட்ட பிரசங்கியாராகவும், காலை ஆராதனைக்குப் பிறகு ஒரு தம்பதியரின் வீட்டில் உணவு உண்ண அழைக்கப்பட்டவராயும் இருந்தது பற்றி* Fred Craddock *அவர்கள் கூறுகின்றார். அவர்கள் ஞாயிறு மதிய உணவுக்கு அமர்ந்தார்கள். உணவு மேஜையானது ஆடம்பரமாய்த் தயார் செய்யப்பட்டிருந்தது,* Craddock *அவர்கள் அது பார்வைக்கு எவ்வளவு நன்றாயிருந்ததென்று பாராட்டினார். மனைவி முள் கரண்டியைக் கையில் எடுத்துக் கொண்டே, "நான் இந்த முள் கரண்டிகளை விரும்புவதேயில்லை'' என்று கூறினார்கள். உடனே, அப்பெண்ணின் கணவர் கண்களில் கோபம் தெறிக்கப் பார்வையொன்றை வீசி, எழுந்து நின்று, தமது கைத்துணியைக் கீழே வீசியெறிந்து, "உனக்காக நான் செய்துள்ள எதையுமே நீ பாராட்டுவதே கிடையாது; இதை இனியும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது" என்று கூறி, புயல் போல வீட்டிற்கு வெளியே சென்றார். என்ன செய்வதென்று அறியாத* Craddock, *அவரது முள் கரண்டியைக் கையில் எடுத்து, அதைப் பார்த்து விட்டு, "முள் கரண்டி அவ்வளவு மோசமானதென்று நான் நினைக்கவில்லை'' என்றார். பிறகுதான் அவ்விரு வருக்குமே அது இரண்டாவது திருமணம் என்பதையும், கணவர் தனது முதல் திருமணத்திலிருந்து கொண்டு வந்திருந் தவை வெள்ளிப் பாத்திரங்கள் மட்டுமே என்றும் அறிந்தார். ஒரு வார்த்தை பெற்றுள்ள வல்லமை திகைப்புக்குரியது ஆகும். அது ''முள் கரண்டி'' என்பதாகவோ அல்லது ''இல்லம்'' என்பதாகவோ இருக்கலாம்.*

## *தேவனுக்கு நன்றியுடைமையைக் காண்பித்தல்*

*இது ஒரு பணக்கார மனிதரைப் பற்றிய பழங்காலக் கதையாகும். அவர் ஒருமுறை கடுமையாக நோய்வாய்ப்பட்டுப் பிறகு சுகமடைந்த பின், தேவனிடத்தில் நன்றியுடைமையால் நிறைந்தவராய், தேவனுடைய நன்மைக்கு திருப்பிச் செலுத்தும் வழியை வேண்டிக் கேட்டார். ஒருவேளை வானத்தை எட்டும் உயரமான ஆலயம் ஒன்றை அவர் எழுப்பினால் அது சரியாகுமா? அப்பழங்கதையின்படி, அம்மனிதரிடத்தில்*

தோன்றிய தூதன் "உங்கள் பணத்தைப் பரலோகத்திற்கு நீங்கள் அனுப்ப முடியாது, ஆனால் நீங்கள் உங்கள் நன்றியுடைமை யைக் காண்பிக்க முடியும்'' என்று சொன்னான். அத்தூதன் அம்மனிதரை ஏழ்மையில் வாழ்ந்த ஒரு குடும்பம் வசித்து வந்த ஒரு சிறிய, நன்கு கட்டப்படாத வீட்டிற்குள் அழைத்துச் சென்றான்; அந்தத் தகப்பனார் வியாதியாய், வேலையின்றி யிருந்தார், தாயாரோ விரைவில் தங்கள் உணவுக்கு என்ன செய்யப் போகிறோமோ என்று கவலையாயிருந்தாள், பிள்ளைகள் கந்தலாயிருந்த சில துணிகளையே அணிய வைத்திருந்தார்கள். தூதன் அம்மனிதரிடம், "உங்கள் பலிகளைச் செலுத்த இதோ ஒரு பலி பீடம்'' என்றான்.




பவுலின் முதலாம் மற்றும் இரண்டாம் ஊழியப்பயணங்கள்